குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண். 160/2020

அ.சா. 2

2025–ம் ஆண்டு நவம்பர் 14–ம் தேதி வெள்ளிக்க்கிழமை அரசு தரப்பு சாட்சி 2–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.சிவக்குமார் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரோஜா | தொழில் | |
| தந்தை பெயர் | பழனி | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.39 மணி,

Accused A1 Gunasekaran present A2 Palaniyammal, A3 Thamilvanan, A4 Manju absent. Petition U/s. 317 CrPC filed and allowed. Advocate Mr. R.Balu present for all accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் ஜாலிகொட்டாய் காட்டில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர். எதிரிகள் அனைவரையும் தெரியும். சுமார் 6 – 7 வருடங்களுக்கு முன் பகல் 01.30 மணிக்கு நான் எங்களுக்கு சொந்தமான தோட்டத்தில் நானும் எனது கணவரும் இருந்தோம். அப்போது எதிரி மஞ்சு என்பவர் டிரேக்டரால் எங்களுக்கு சொந்தமான நிலத்தை உளுதார். நானும் எனது கணவரும் அவரை ஓட்டவேண்டாம் என தடுத்தோம் அவர் டிரேக்டரை எங்கள் மீது ஏற்ற வந்தார்.

2. தமிழ்வாணன், மஞ்சு மற்றும் அவருடன் நிறைய நபர்கள் வந்து என்னையும் என் கணவரையும் அடிக்க வந்தார்கள். அப்போது மஞ்சு என் கணவரை அடித்துவிட்டார். என் கணவருக்கு உள் காயம் ஏற்பட்டது. எனக்கு நெஞ்சு வலி ஏற்பட்டது. எனது கணவரை யார் அடித்தார்கள் என்று என்னால் குறிப்பாக சொல்ல முடியவில்லை. டிராக்டர் ஓட்டி வந்த நபர்கள் அடித்தார்கள். எனது கணவர் மருத்துவமனைக்கு சென்றார். என்னை யார் அடித்தார்கள் என்று அந்த நபர்களை அடையாளம் காட்ட முடியாமா என்றால் என்னால் அடையாளம் காட்ட முடியாது. போலிசார் விசாரித்தனர்.

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2025.11.14 17:49:31 +0530

**(அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கேட்டதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

3. போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அந்த விசாரணையில் கடந்த 08.08.2017 மாலை சுமார் 03.30 மணிக்கு சின்னம்மா ஜாலிக்காட்டில் எதிரிகள் அனைவரும் அத்து மீறி உள்ளே நுழைந்து டிரேக்டர் வைத்து எங்களுக்கு சொந்தமான நிலத்தை ஓட்டினார்கள் என்றும் அதை கேட்ட அ.சா. 1 யை பார்த்து 1,2,3 எதிரிகள் கெட்ட வார்த்தையால் திட்டினார்கள் என்றும் 4ம் எதிரி அ.சா.1ன் வலது பக்க கன்னத்தில் அறைத்து நெஞ்பகுதியில் எட்டி உதைத்தார் என்றும் 1ம் எதிரி என் நெஞ்சு பகுதியில் கையால் குத்தினார் என்றும் மேற்படி சங்கதிகளை விசாரணையின் போது கூறினேன் என்றால் சரிதான்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

4. நான் சின்னம்மா ஜாலிக்காட்டில் என்ற இடத்தில் தான் பூர்வீகமாக குடியிருந்து வருகிறோம். எனது மாமியார் பெயர் சாலம்மாள். அவர் இறந்து சுமார் 15 வருடங்கள் ஆகிவிட்டது. சாலம்மாள் ஆஜர் 1ம் எதிரியின் பாட்டி கந்தம்மாள் என்பவருக்கு 1975ல் அவரது அனுபவத்தில் இருந்த அரசு புறம்போக்கு நிலத்தில் கிரையம் செய்து கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நானும் எனது குடும்பத்தாரும் வெளியூரில் தான் வசித்து வந்தோம் என்றாலும் 2017ம் ஆண்டு ஜாலிக்காட்டில் வீடுகட்டி குடியிருந்து வருகிறோம் என்றாலும் சரியல்ல.

5. எனது கணவர் பழனிக்கு எதிராக 1ம் எதிரியில் தந்தை சுப்ரமணி, கலா, கமலா, வளர்மதி மற்றும் 1ம் எதிரி குணசேகரன், ஓமலூர் சார்பு நீதிமன்றத்தில் உரிமையியல் வழக்கு OS.122/2021 என்ற வழக்கை தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. எனது மாமியார் எதிரிகளுக்கு விற்பனை செய்த நிலத்தில் தான் சம்பவ தினத்தன்று அவர்கள் டிராக்கடர் ஓட்டிக்கொண்டிருந்தார்கள் என்றாலும் எனது கணவர் குடிபோதையில் அவர்களுடன் சண்டையிட்டார் என்றாலும் சரியல்ல.

6. சம்பவத்தன்று நானும் எனது கணவர் மட்டும் தான் சம்பவ இடத்தில் இருந்தோம் என்றால் சரி. சம்பவம் மதியம் 01.30 மணியளவில் நடந்தது. எனது மகன்

S SHARMILA Digitally signed by S SHARMILA Date: 2025.11.14 17:49:34 +0530

மூர்த்தி தான் எனது கணவரை மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார் என்றால் சரி. எனது கணவர் சம்பவத்தின் போது குடிபோதையில் இருந்தார் என்றால் சரியல்ல. எனது கணவர் மருத்துவனையில் அனுமதிக்கப்பட்டபோது அவர் மருத்துவரின் அனுமதி பெறாமல் மருத்துவனையில் இருந்து வெளியேறி விட்டார் என்றால் சரியல்ல. வழக்கு எதிரிகள் அவர்களுக்கு சொந்தமான இடத்தில் டிராக்டர் ஓட்டிக்கொண்டிருந்தார்கள் என்றாலும் என்னையும் எனது கணவரையும் அவர்கள் அடிக்கவில்லை என்றாலும் வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

7. எனது மாமியார் எதிரிகளுக்கு விற்பனை செய்த நிலத்தை நாங்கள் அவர்களிடம் விலைக்கு கேட்டபோது அவர்கள் கொடுக்க மறுத்துவிட்டதால் எதிரிகள் மீது பெய்ப்புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல. 1ம் எதிரி சம்பவ இடத்தில் உள்ள நிலத்தை சுமார் 40 வருடங்களாக விவசாயம் செய்து வருகிறார் என்றாலும் அந்த நிலத்தை பெற வேண்டும் என்பதற்காக அவர்களுக்கு எதிராக புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 01.09 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2025.11.14 17:49:37 +0530